# காதலர் / கற்புக் கொள்ளையர் தினமா?

**பெப்ரவரி 14 : காதலர் தினம் என்ற பெயரில் பெண்களின் கற்பை சூறையாடும் கற்பு கொள்ளையர் தினமாக கொண்டாடப் பட்டு வருகின்றது. மீடியாக்கள் கொடுக்கும் முக்கியத்துவத்தால் இந்த கற்பு கொள்ளையர் தினம் இன்றைக்கு சமூகத்தில் புற்று நோய் போல் பரவி வருகின்றது. மக்களின் உணர்வுகளை தூண்டி அதைப் பணமாக்கத் துடிக்கும் மேற்கத்திய பண முதலைகளினால் உருவாக்கப்பட்ட இந்த தினம் இன்று இலங்கையில் உள்ள இளம் வயதினரையும் தொற்றிக் கொண்டது.**

## வெலன்டைன்ஸ் என்றால் காதலர் என்று பொருளா?

காதலரை வாழ்த்துவதாக எண்ணிக் கொண்டு பலர் “ஹெப்பி வெலன்டைன்ஸ் டேய்” என்று கூறுகின்றனர். ஆனால் கிறுஸ்தவ போதகர் வெலன்டைன் என்பவரின் நினைவாக ரோமப் பாரம்பரியத்தினால் உருவானதே இந்த வெவன்டைன்ஸ் என்னும் பெயராகும். இதனைக் கூறினால் கிருத்தவப் பாதிரி ஒருவரை வாழ்த்தியதாகவே அமையும். ஏன் இந்த பெப்ரவரி 14 தெரிவு செய்யப்பட்டது என்ற சரியான எந்த வரலாறும் இல்லாத போதும் தமது வணிகத்தை உயர்த்துவதற்காக மேற்கத்திய நாடுகள் தாம் இதை காதலர் தினமாக பிரபல்யப்படுத்தின.

இன்றைய மீடியாக்கள் காதல் எனும் காமக்களியாட்டத்தை சாதாரண விடயமாக ஆக்கி அதை ஊக்கப்படுத்தி தனி நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கி சமூகத்தை சீரழிப்பது சாதாரணமாகி விட்டது. கேள் ஃபிரண்ட இல்லாத நல்லொழுக்கம் உள்ளவனை கோமாளி போல் சித்தரித்து “அடப்பாவி! உனக்கு கேள் ஃபிரண்டே இல்லையா? அப்ப நீ சுத்த வேஸ்ட்டு” என்று கூறும் அளவுக்கு காதலை ஒரு பெருமைக்குரியதாக ஆக்கி விட்டதே இந்த மீடியாக்கள் தாம்.

## காதலிப்போர் கவனத்திற்கு :

காதல் என்பது இளம் வயதில் ஏற்படும் ஒரு மாயையே. இதை நாம் சரியாக கையாளாமல் விட்டால் கற்பை இழந்து சீரழிய நேரிடும். காதலிக்கும் போது எதையும் செய்யத் துணிவதால் ஒருவருக்கொருவர் நற்குணங்களை வெளிப்படுத்தினாலும் திருமணத்தின் பின்னர் நிஜமான வாழ்க்கையை அனுபவிக்கும் போது இன்பமாக மட்டுமே அது இருப்பதில்லை. ஆகையால் அதிகமான காதல் திருமணங்கள் பிரிவின் உச்சத்துக்கே போய் விடுகின்றன. காதலர்களின் கிறுக்குத் தனங்களால் அதிகமான குடும்பங்கள் அதை எதிர்க்கும் நிலையிலேயே காதல் திருமணம் அரங்கேறுகிறது. அல்லது ஓடிப்போய் திருமணம் நடக்கிறது. பின்னர் தம்பதிகளுக்கிடையில் நிஜமான சண்டைகள் தோன்றி அதைக் குடும்பத்தில் ஏன் என்று கேட்பதற்குக் கூட ஆளில்லாம் காதலனின் கொடுமைகளை அனுபவித்துப் பெண்களின் வாழ்க்கை மண்ணாகிப் போகிறது.

## காதலிப்போருக்கு ஏற்படும் பேரிழப்புகள் :

மிக மிக அதிகமாக காதலிக்கும் ஆண்கள் காதலியின் கற்பை சூறையாடவே சந்தர்ப்பம் தேடுகின்றனர். அதனால் ஆண்களுக்கு இதனால் எந்தப் பாதிப்பும் இல்லை. ஆனால், பெண்கள் தாம் தமது கற்பையும் இழந்து எதிர்கால வாழ்வையும் இழந்து சமூகத்தில் இழிபிறவிகளாகப் பேசப்படுகின்றனர். பெண்களே! நீங்கள் உங்கள் பெற்றோர் சொல்வதை மதிக்காமல் செய்யும் இக்காரியங்களால் நாளை உங்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும் இவை தெரியும் போது உங்கள் குழந்தைகளும் உங்களை மதிக்க மாட்டார்கள். இளம் பெண்களே! உங்கள் பெற்றோர் சொல்வதைக் கேளுங்கள்! உங்கள் உணர்வுகளை அடக்கி வாழ்ந்தால் மதிப்புமிக்க மங்கைகளாக வாழலாம்.

**இளைஞர்களே கவனமாகக் கேளுங்கள் :**

உங்கள் காதலியின் சின்னச் சிரிப்பில் மயங்கி, நினைப்பில் ஏங்கும் உங்கள் எதிர்காலத்தை சிந்தித்துப் பாருங்கள்! நீங்கள் விரும்பும் பெண் கிடைக்காவிட்டால் அது உங்களை நிரந்தர சோகத்தில் ஆழ்த்தி விடுகிறது. இதனால் வாழ்க்கையில் அனைத்தையும் வெறுக்கிறீர்கள். காதலிக்க உங்கள் அன்புப் பெற்றோர்களை ஏமாற்றி அவர்களின் காசு பணத்தையெல்லாம் இதற்காக வீணடிக்கிறீர்கள். உங்கள் கல்வி, எதிர்காலம் யாவற்றையும் மண்ணாக்கி பெற்றோர்களின் எதிர்பார்ப்பையெல்லாம் சுக்குநூறாக உடைப்பது நியாயமா என்று நினைத்துப் பாருங்கள்!

**காதல் எனும் காமக்கழியாட்டங்கள் விபச்சாரமே :**

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “விபச்சாரத்தில் ஆதமுடைய மகனுக்குள்ள பங்கை இறைவன் எழுதியுள்ளான். அதை அவன் அடைந்தே தீருவான். கண் செய்யும் விபச்சாரம் பார்வையாகும், நாவு செய்யும் விச்சாரம் பேச்சாகும், மனம் ஏங்குகிறது. இச்சை கொள்கிறது. பிறப்பு உறுப்பு இவை அனைத்தையும் உண்மையாக்குகிறது. அல்லது பொய்யாக்குகிறது” (புகாரி : 6243) மார்க்கம் சொன்ன படி ஒரு பெண்ணைப் பிடித்திருந்தால் பொறுப்புதாரியிடம் போய் பேசி மணம் முடிப்பதை விட்டுவிட்டு தவறான பேச்சும், பார்வையும், பாலியல் சிந்தனைகளும் இஸ்லாத்தில் விபச்சாரமாகவே உள்ளன.

**காதலும் பெற்றோர்களின் பொடுபோக்கும் :**

மார்க்க அடிப்படையில் பிள்ளைகளை வழி நடாத்த வேண்டிய பெற்றோர்கள் பிள்ளைகள் பார்ப்பதற்காக டீ.வீ, சினிமா, சீரியல் என எல்லா வகையான காதல் வழிமுறைகளையும் காட்டிக் கொடுத்து விட்டு தாமும் சேர்ந்தே அதைப் பார்த்து மகிழ்கின்றனர். போதாக் குறைக்கு தொலைபேசிகளையும் வாங்கிக் கொடுத்து விடுகின்றனர். ஒரு ஆணும், பெண்ணும் நேரில் பேசும்போது வெட்கம் தடுக்கிறது, அல்லது சமூகத்தின் கழுகுப் பார்வை அவர்களைத் தடுக்கிறது. ஆனால் பாதுகாப்பாக தவறான பேச்சுப் பேசவும், வெட்க உணர்வைத் தகர்க்கவும் செய்து தங்குதடையின்றி உரையாட வைக்கும் இந்த செல்போன்கள் உண்மையில் செக்ஸ் போன்களே. இறுதியில் தன் பிள்ளை யாருடனும் ஓடிவிட்ட பிறகு தலையில் அடித்து அழுவதால் பெற்றோர்களுக்குத் தீர்வு கிடைத்து விடுமா? சிந்தியுங்கள் பெற்றோர்களே!

**உயிர் பறிக்கும் காதல்**

இன்று அதிகம் கேள்விப்படும் தற்கொலைகள் காதல் தற்கொலைகளே! யாரும் தன்னைத் தன் தாய் நேசிக்கவில்லை, தன் தந்தை நேசிக்கவில்லை என்று தற்கொலை செய்த வரலாறே நாம் கேட்டதில்லை. ஆனால் தனது காதலன் நேசிக்கவில்லை, காதலி நேசிக்கவில்லை என்றே தற்கொலை செய்கின்றனர். தற்கொலைக்கு நிரந்தர நரகம் என்று கூறிய இஸ்லாத்தில் காதலுக்காக தற்கொலை செய்யும் முஸ்லிம்களைப் பார்த்தால் மிகவும் வேதனையாக உள்ளது. இதையும் தாண்டி காதலுக்காக பெற்றோரைக் கொல்வதும், கள்ளக் காதலிக்காக தனது மனைவியைக் கொல்வதும், கள்ளக் காதலனுக்காக தன் கணவனைக் கொல்வதும் சாதாரணமாகி விட்டது. இப்படி இந்தக் காதல் மனிதனை ஒரு மிருகமாகவும், மனநோயாளியாகவும் ஆக்கியதால் கொலைகளும், தற்கொலைகளுமே காதலின் பெரும் சாதனைகளாக வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**காதலை சீர்கேடு என அனைவரும் ஏற்றுள்ளனர்**

காதலித்து திருமணம் செய்தவர்கள் கூட தமது பிள்ளைகள் காதல் கத்திரிக்கா என்று அலைவதை ஏற்பதில்லை. இவ்வளவு ஏன் தான் காதலிப்பது போல் தன் சகோதரி காதலிக்கிறாள் என்று தெரிய வந்தால் அவளின் காதலனிடம் அதற்காக முதலில் சண்டைக்குச் செல்பவன் கூட காதலிக்கும் இந்த இளைஞன் தான். உயிர் கொல்லியான இந்தக் காதலை ஊக்கப்படுத்தும் வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றின் நிகழ்ச்சித் தொகுப்பாளர்களிடம் போய் “சார் நான் உங்க பொண்ண லவ் பண்ணிக்கவா?” என்று கேட்டால் “டேய் உன்னை நான் ஈவ்டீஸிங்ல உள்ள தள்ளிடவா?” என்று கேட்பதைக் தான் காணலாம். ஆகவே இந்தக் காதல் என்பது யார் செத்தாலும் பறவாயில்லை நான் மட்டும் நன்றாக இருக்க வேண்டும் என்ற சுயநலம் உடையவர்களையே உருவாக்கியுள்ளது. இதிலிருந்து நம் இளைய சமுதாயத்தைக் காக்கப் பாடு படுவோமாக!

வெளியீடு :
**ஸ்ரீலங்கா தவ்ஹீத் ஜமாஅத்**
**241A, ஸ்ரீ சத்தர்ம மாவத்தை மாளிகாவத்தை, கொழும்பு - 10**